Mr. RAJA MANICKA



# சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை

## மானியக் கோரிக்கை எண் -15

## சுற்றுச்சூழல்

## அறிவிப்புகள்

## 2013 - 2014

Jasons Industries Ltd.,

# சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை

## மானியக் கோரிக்கை எண் -15

# சுற்றுச்சூழல்

## அறிவிப்புகள்
## 2013 - 2014

எம்.சி. சம்பத்
சுற்றுச்சூழல் துறை அமைச்சர்

# சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை 2013–2014 ஆம் ஆண்டிற்கான அறிவிப்புகள்

## சுற்றுச்சூழல் மற்றும் மாசு கட்டுப்பாடு

### 1. வாரிய சொந்த கட்டிடங்களுக்கு சூரிய ஒளி மின் உற்பத்தி சாதனங்கள் அமைத்தல்

தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் 32 மாவட்ட அலுவலகங்கள் மற்றும் 15 ஆய்வகங்களுடன் சுற்றுச்சூழல் சட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகிறது. இவற்றில் வாரிய தலைமை அலுவலகம் மற்றும் 9 மாவட்ட அலுவலகங்கள் ஆய்வகங்களுடன் சொந்த கட்டிடங்களில் இயங்கி வருகின்றன. இந்த கட்டிடங்களில் பயன்படுத்தப்படும் மின்சாரம், தமிழ்நாடு மின்சார வாரியம் மூலம் வழங்கப்பட்டு வருகிறது. தமிழக அரசு சூரிய ஒளி மூலம் மின் உற்பத்தி செய்தல் குறித்த புதிய கொள்கையினை அறிவித்துள்ளது. சூரிய ஒளியினை பயன்படுத்தி மின் உற்பத்தி செய்யப்படும்பொழுது எவ்வித கழிவுகளும் உற்பத்தி ஆவதில்லை. இதனால் சுற்றுச்சூழலுக்கு எந்தவித பாதிப்பும் ஏற்படாது.

எனவே தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி 2013–14ஆம் நிதி ஆண்டில் சொந்த கட்டிடங்களில் இயங்கி வரும் வாரிய தலைமை அலுவலகம் மற்றும் 9 மாவட்ட அலுவலகங்களின் மின் தேவையினை பூர்த்தி செய்யும் வகையில் சுமார் ரூ.3 கோடி மதிப்பீட்டில் சூரிய ஒளியினை கொண்டு மின் உற்பத்தி செய்யக் கூடிய சாதனங்களை அமைக்க உள்ளது.



### 2. காற்றுத்தன்மை கண்காணிக்கும் திறனை அதிகப்படுத்த 4 வாரிய ஆய்வகங்களுக்கு Atomic absorption spectrometer with Graphite Furnace வாங்குதல்

2009–ல் அமல்படுத்தப்பட்ட தேசிய சுற்றுப்புற காற்றுத்தரக் கட்டுப்பாட்டு அளவுகோலின்படி காற்றிலுள்ள காரீயம் (Lead) நிக்கல் (Nickel) மற்றும் ஆர்சனிக் (Arsenic) போன்ற உலோகங்களை மைக்ரோ கிராம் மற்றும் நானோ கிராம் அளவில் அளவீடு செய்யவும் மற்றும் தொழிற்சாலை கழிவு நீர் மற்றும் நீரிலுள்ள உலோகங்களை அளவீடு செய்யவும், 2013–2014ஆம் ஆண்டில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி ஒவ்வொன்றும் ரூ.75 லட்சம் செலவில் Atomic absorption spectrometer with Graphite Furnace சென்னை, வேலூர், கடலூர் மற்றும் திருச்சி ஆகிய 4 வாரிய ஆய்வகங்களுக்கு மொத்தம் ரூ.3 கோடி செலவில் வாங்கப்படும்.

## 3 . கும்மிடிப்பூண்டி தொழிற்சாலை வளாகத்தில் ஒரு நேரடி தொடர் காற்று கண்காணிக்கும் நிலையம் நிறுவுதல்

கும்மிடிப்பூண்டி சிப்காட் தொழிற்சாலை வளாகத்தில் இயங்கி வரும் தொழிற்சாலைகளிலிருந்து வெளியேற்றப்படும் வாயுக்களை அளவீடு செய்யும் பொருட்டு அங்கு வாரிய நிதியிலிருந்து ரூ.87 லட்சம் செலவில் ஒரு நேரடி தொடர் காற்று கண்காணிக்கும் நிலையம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி 2013–2014ஆம் ஆண்டில் நிறுவப்படும்.



## 4 . தூத்துக்குடி நகரின் காற்றுத் தன்மையை கண்காணிக்க ஒரு நேரடி தொடர் காற்று கண்காணிக்கும் நிலையம் நிறுவுதல்

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி 2013–2014ஆம் ஆண்டில் தூத்துக்குடி நகரின் காற்றுத் தன்மையை கண்காணிக்கும் பொருட்டு அங்கு வாரிய நிதியிலிருந்து ரூ.87 லட்சம் செலவில் ஒரு நேரடி தொடர் காற்று கண்காணிக்கும் நிலையம் நிறுவப்படும்.

## 5. காற்றுத்தன்மை கண்காணிக்கும் திறனை அதிகப்படுத்த 5 ஆய்வகங்களுக்கு ஓசோன் அளவீட்டு மானி வாங்குதல்

2009–ல் அமல்படுத்தப்பட்ட தேசிய சுற்றுப்புற காற்றுத்தரக் கட்டுப்பாடு அளவுகோலின்படி, காற்றிலுள்ள ஓசோன் (Ozone) அளவை அளவிட, ஓசோன் அளவீட்டு மானி ஒவ்வொன்றும் ரூ.8 லட்சம் செலவில் சென்னை, மதுரை, கோயம்புத்தூர், சேலம், மற்றும் கடலூர் ஆகிய 5 ஆய்வகங்களுக்கு 2013–2014 ஆம் ஆண்டில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி மொத்தம் ரூ.40 லட்சம் செலவில் வாங்கப்படும்.



## 6. தாமிரபரணி ஆற்று நீரின்தன்மையை தொடர்ந்து கண்காணித்தல்

தாமிரபரணி ஆற்றின் கரையோரங்களில் அமைந்துள்ள தொழிற்சாலைகள் மற்றும் நகராட்சி கழிவுநீரால் ஏற்படும் ஆற்று நீரின் மாசினை கண்காணிக்க மாதந்தோறும் நீர் மாதிரிகள் எடுக்கப்பட்டு நீரின் தன்மை கண்காணிக்கப்பட்டு வருகிறது. மேலும், இந்த ஆற்று நீரின் தன்மையை தொடர்ந்து கண்காணிக்கும் பொருட்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் 2013–2014 ஆம் ஆண்டில் தாமிரபரணி ஆற்றில் மூன்று தொடர் கண்காணிப்பு நிலையங்களை ரூ.40 லட்சம் செலவில் ஏற்படுத்தி நீரில் கரைந்துள்ள மாசின் தன்மையை கண்காணிக்க உள்ளது. இந்தக் கண்காணிப்புக் கருவிகள் தாமிரபரணி ஆற்றில் மூன்று இடங்களில் பொருத்தப்பட்டு, மாசின் அளவுகள் 24 மணி நேரமும் தொடர்ந்து கண்காணிக்கப்படும். இந்த கண்காணிப்புக் கருவிகள் வாரிய தலைமை அலுவலகம் மற்றும் தொடர்புடைய மாவட்ட அலுவலகங்களுடன் இணையதளம் மூலம் இணைக்கப்படும்.

## 7. சுற்றுச்சூழல் மன்றங்கள் அமைத்தல்

மாணவர்கள் சுற்றுச்சூழல் தொடர்பான பிரச்சனைகளை உணர்ந்து கொள்ளவும், சுற்றுச்சூழலைப் பற்றி புரிந்து கொள்வதை மேலும் வலுவடையச் செய்யும் நோக்கத்துடன் சுற்றுச்சூழல் மன்றங்கள் ஏற்படுத்தப்பட்டன. மரம் நடுதல், விழிப்புணர்வு பேரணிகள், மண்புழு உரம் தயாரித்தல், சுற்றுச்சூழல் கண்காட்சி, சுற்றுச்சூழல் போட்டிகள், பிளாஸ்டிக்கிற்கு எதிரான பிரச்சாரம், கலை நிகழ்ச்சிகள், இயற்கை முகாம்கள், குறைந்த பட்சம் ஆறு பசுமை தினங்களைக் கொண்டாடுதல் போன்ற செயல்திட்ட நடவடிக்கைகளில் மாணவர்களைப் பங்கேற்கச் செய்வதே இத்திட்டத்தின் முக்கிய குறிக்கோளாகும்.

தமிழகத்தில் **1869** பள்ளிகளில் ஏற்கனவே சுற்றுச்சூழல் மன்றங்கள் இயங்கி வந்தன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனைத்து அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் சுற்றுச்சூழல் மன்றங்கள் படிப்படியாக அமைக்கப்பட வேண்டும் என்று ஆணையிட்டதன்படி **2012–2013**ஆம் ஆண்டில் மாவட்டம் ஒன்றிற்கு **100** பள்ளிகள் வீதம் **3200** பள்ளிகளில் சுற்றுச்சூழல் மன்றங்கள் ரூ.**80** லட்சம்



செலவில் அமைக்கப்பட்டன. பள்ளி ஒன்றிற்கு ரூ.**2500/–** வீதம் உதவித்தொகையாக மாநில அரசால் வழங்கப்பட்டது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, **2013–14**ஆம் ஆண்டில் மேலும் **3200** பள்ளிகளில் சுற்றுச்சூழல் மன்றங்கள் ரூ.**80** லட்சம் செலவில் அமைக்கப்படும். பள்ளி ஒன்றிற்கு ரூ.**2500/–** வீதம் உதவித்தொகை வழங்கப்படும்.

## 8. பிளாஸ்டிக் பொருட்கள் குறித்த விழிப்புணர்வு இயக்கம்

பயன்படுத்தியபின் தூக்கி எறியப்படும் பிளாஸ்டிக் பொருட்கள் பயன்பாட்டினைக் குறைப்பதற்கு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் ஆழ்ந்த அக்கறை கொண்டுள்ளார்கள்.

2011–12ஆம் ஆண்டில் ரூ.31 லட்சம் செலவிலும், 2012–13ஆம் ஆண்டில் ரூ.19 லட்சம் செலவிலும் பிளாஸ்டிக் உபயோகத்தினால் சுற்றுச்சூழலுக்கு நேரிடும் விளைவுகள் தொடர்பான விழிப்புணர்வு, பொதுமக்களுக்கும் மாணாக்கர்களுக்கும் நடைப்பயணம், சைக்கிள் பேரணி, ஓவியம் மற்றும் கட்டுரை போட்டிகள் போன்ற செயல்பாடுகள் மூலம் ஏற்படுத்தப்பட்டது.

பயன்படுத்தியபின் தூக்கி எறியப்படும் பிளாஸ்டிக் பொருட்கள் பயன்பாட்டினைக் குறைக்க வேண்டுமென்ற மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் விருப்பத்தின் அடிப்படையில், 2013–14ஆம் ஆண்டில் பிளாஸ்டிக்



பயன்பாட்டினால் ஏற்படும் சீர்கேடுகள் குறித்த விழிப்புணர்வு நடவடிக்கைகளை "Message on Wheels" என்ற திட்டத்தின்படி மாவட்டம் ஒன்றிற்கு ரூ.2 லட்சம் அனைத்து மாவட்டங்களிலும் ரூ.64 லட்சம் செலவில் மேற்கொள்ளப்படவுள்ளது.

இத்திட்டத்தின் மூலம் பொதுமக்கள் மற்றும் பள்ளி மாணாக்கர்களுக்கு பிளாஸ்டிக் பொருட்கள் பயன்பாட்டின் தீமைகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்படும்.

Falco SIDCO

## 9. தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரிய அனைத்து விஞ்ஞானிகள் மற்றும் பொறியாளர்களுக்கு இடர் படி ரூ.500/– வழங்குதல்

தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் தமிழ்நாட்டின் சுற்றுச்சுழல் பாதுகாப்பில் முக்கிய பணியாற்றி வருகின்றது. தொழிற்சாலைகள் வெளியேற்றும் திட, திரவ மற்றும் வாயுக் கழிவுகளின் தரத்தினைக் கண்காணிக்கும் பொருட்டு மாதந்தோறும் தொழிற்சாலைகளில் மாதிரிகள் சேகரிக்கப்பட்டு ஆய்வு செய்யப்படுகிறது. இப்பணிகளில் வாரிய பொறியாளர்கள் மற்றும் விஞ்ஞானிகள் ஈடுபட்டு வருகின்றனர். இப்பணிகளின் போது கழிவுநீர் தொட்டிகளிலிருந்து மாதிரிகள் சேகரிப்பது, அபாயகரமான திடக்கழிவு சேமிப்பு கிடங்கிற்குள் சென்று மாதிரிகள் சேகரிப்பது, உயரமான புகைபோக்கியில் ஏறுவது, ஆய்வகங்களில் பகுப்பாய்வு செய்வதற்காக அபாயகரமான வேதிப்பொருட்களை கையாளுவது போன்ற உயிருக்கு ஆபத்தான பணிகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது. மேலும் சட்ட விரோதமாக இயங்கி வரும் தொழிற்சாலைகளை அகற்றும் போதும், இரவு நேரங்களில் தொழிற்சாலைகள் மற்றும்



அதனை சுற்றியுள்ள பகுதிகளை ஆய்வு செய்யும் போதும் வாரிய பணியாளர்களின் உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்படுகின்றது. தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரிய விஞ்ஞானிகளுக்கு தற்போது ரூ.60/– இடர்படியாக வழங்கப்பட்டு வருகிறது. இவர்களின் பணி செம்மையாக நடைபெறவும் அவர்களை ஊக்குவிக்கும் வகையில் தற்போது வழங்கப்பட்டு வரும் இடர்படி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, ரூ.60–லிருந்து ரூ.500/– ஆக உயர்த்தி வாரியத்தின் அனைத்து விஞ்ஞானிகள் மற்றும் பொறியாளர்களுக்கு இடர்படியாக வழங்கப்படும். இதன் மூலம் சுமார் 170 பொறியாளர்கள் மற்றும் விஞ்ஞானிகள் பயனடைவார்கள். இதற்கென ஆண்டொன்றுக்கு ரூ.10.20 லட்சம் வாரிய நிதியிலிருந்து ஒதுக்கப்படும்.

**எம்.சி. சம்பத்**
சுற்றுச்சூழல் துறை அமைச்சர்